# ஸ்தபதி திரு. S.K. ஆச்சாரி – மீனாட்சி அம்மாள் 80ம் ஆண்டு நிறைவு விழா வாழ்த்துரை

(23 May 2004)

இன்றைய தினம் நாம் காணும் நிகழ்ச்சி நமது இருதயச் சுவர்களில் ஆணி அடித்து மாட்ட வேண்டிய காட்சி. காலம் தனது டைரியில் பதிவு செய்ய வேண்டிய நிகழ்ச்சி. உறவினர், நண்பர்கள் மனங்களில் பூத்துக் குலுங்கும் மகிழ்ச்சியை வணங்குகிறேன்.

எங்கள் வாழ்க்கைக்கு திசை காட்டுவதும், எங்கள் திசைகளுக்கு வழி காட்டுவதும், எங்கள் வழிகளுக்கு ஒளி காட்டுவதும் எங்கள் வலிகளுக்கு மருந்திடுவதும் எங்கள் பெற்றோரின் உணர்வுகளில், உள்ளங்களில், இரத்த நாளங்களில் நிறைந்திருக்கும் குலதெய்வம் ஸ்ரீ சிலைகட்டி அம்மன்-வீட்டம்மன் பாதம் வணங்குகிறேன்.

எங்களின் தந்தையை மனிதரில் தெய்வம் என்றும், இரும்பு மனிதர் என்றும், கலைப்புலி என்றும், தாயை திருவிளக்கு என்றும், நிறைகுடம் என்றும் இருவரையும் அஷ்டமங்களத்தின் அடையாளம் என்றும் போற்றி புகழ்மாலை சூட்டுகிறேன்.

எங்கள் தாயின் உருவிற்கு கருவைத் தந்தவர் லட்சம் சிற்பியர்க்கு குருவானவர் மகி-வைதியநாதஸ்தபதி. இவர் தான் சிற்பியரின் இந்த நூற்றாண்டு சிறி மூலம்.

சிற்பியர் சக்ரவர்த்தி - செட்டிநாட்டில் தனது குறுகிய காலத்தில் பற்பல ஆலயம் செய்த சிற்பியர் பேரரசர் ஸ்வாமிநாதஸ்தபதியின் ஒரே வாரிசு எங்கள் தந்தையாவர். அந்த ஒரே வாரிசு அன்று ஒற்றை மரம். இன்று அவரைச் சுற்றி ஒரு வாரிசு உலகம்.

எங்கள் தாய் அவரது இளம் வயதிலேயே அவரது தாய்ககு தாயாக உள்ளம் குன்றாது வாழ்ந்து காட்டியவர்.

எங்கள் தாயின் வயிறு கனத்திருந்த காலங்களில் அவருக்கு விதிக்கப்பட்ட கனமான சுமைகள் இறக்கி வைத்து சொல்ல முடியாதது. ஒன்றினை மட்டும் இறக்கி வைத்து பெருமை சேர்க்கிறேன் எனது தாய்க்கு.

தனது தாய் நோய்வாய்ப்பட்ட நேரங்களில் தனது வயிற்றுச் சுமை மீதே தனது தாயின் சுமையினையும் வைத்து உறங்க வைத்த நினைவுகளை எனது தாய் சொல்லிக் கேள்விபட்டிருக்கிறேன்.

அப்போது எனது பாட்டி வாழ்த்திய வார்த்தைகள் தான் இன்று எனது தாயினை மணிவிழா காண வைக்கிறது. இது தான் எனது தாயினைப் பற்றி சொல்ல வேண்டிய ஒரு சொட்டு செய்தி. அந்த வலிதான் எங்கள் தாய்க்கு வாழ்வில் எத்தனையோ அதிர்வுகளையும், இடிமின்னல்களையும் தாங்கிக் கொள்ள சக்தி கொடுத்தது.

அதே போல் தனது புதல்வர்கள் சிறக்க, ஒரு மூச்சிற்கு முன்னூறு லட்சம் முறை இறைவனை பிரார்த்திப்பது சொல்ல வேண்டிய செய்தி.

எங்கள் தந்தையின் ஒவ்வொரு வெற்றிச் சரித்திரத்திற்கும் உள்ளே எங்கள் தாயின் சித்திரம் கண்டிருக்கிறோம்.

எங்கள் தாய் சொல்லிக் கொடுத்த கந்தபுராணக்கதைகள் தான் எங்களுக்கு பலமுறை உலகைச் சுற்றிவர இறக்கைகளையும், முள்மீது நடந்து வர பாதரட்சைகளையும் விரல்களோடு வளர்ந்து விட்ட எழுத்தாணியையும் பெற்றுத் தந்திருக்கிறது.

எங்கள் தந்தையின் இளம் வயதுக்காலம் காந்தியின் காலம். இந்திய சுதந்திரத்திற்கு கனவு கண்டகாலம். காந்தியின் அஹிம்சை கொள்கையும், காமராஜரின் எளிமையும் தான் அவருக்கு வாழ்வு நெறியை கற்றுத் தந்தது.

பாலகன் வயதில் தனது தந்தையை இழந்ததால் உளி எனும் வாள் பிடித்து தனித்து வெற்றி கண்டவர். தந்தையின் இழப்பால் தனது கல்லூரி தாகத்தினை புதல்வர்களின் உயர்கல்வியால் தீர்த்துக் கொண்டவர். ஆனால் கலைவேட்கைகளை சொல்வதற்கு நேரம் போதாது.

குமரிமுனையில் விவேகானந்தர் படைப்பின் மூலம் உலகம் தனது புருவத்தை உயர்த்தியது. உலக அரங்கில் இவர் பெயர் உச்சரிக்கப்பட்டது. காமராஜர் முதல் லண்டன் ராணி வரை கைகுலுக்கி பழக்கப்பட்டவர். இவர் கண்ட பரிசுகள்-பாராட்டுதல்கள் எத்தனையோ.

இவரது பாதம் பட்ட இடங்கள் எல்லாம் கலைத் தோட்டங்கள்.

கலைக்கு விலையில்லை என்பதை இவரது படைப்புகளில் காணலாம்.

இவரது வாழ்வு இன்றைய இளைஞனுக்கு ஒரு பாடம். இவரது உழைப்பு இன்றைய இளைஞனுக்கு ஒரு பாதை. இளைஞர்களே குறித்து வைத்துக் கொள்ளுங்கள். இளைஞர்கள் தனது முதுகிற்கு பின்னால் நிற்கக் கூடாது. முன்வரிசையில் முகம் காட்ட வேண்டும் என்று இளைஞர்களுக்கு வழிவிட்டவர் என்று பெருமை படுத்தி போற்றி முடிக்கிறேன் வணக்கம்.

**சிற்பி**
**க. தட்சிணாமூர்த்தி**